செ.வெ.எண்-504/2017

நாள் - 11/10/2017

## பத்திரிக்கை செய்தி

### மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப அவர்களின் செய்திக்குறிப்பு

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் தஞ்சை பெரியகோவிலின் வளாகத்திலிருந்து சிறுமி யாழினி (தற்போதைய வயது 5) 6-மாத குழந்தையாக இருந்தபோது ஒரு வயதான பெண்மணியால் சட்ட விரோதமாக கடத்தி சென்றுள்ளார். அச்சிறுமி தற்போது கேரளாவில் மலப்புரம் என்ற பகுதியில் கேரளா காவல்துறையினரால் மீட்கப்பட்டு மலப்புரம் குழந்தைகள் நலக் குழுமத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு குழந்தைகள் இல்லத்தில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளார். சிறுமிக்கு தமிழ், மலையாளம், ஆகிய மொழிகள் தெரியும் தற்போது அச்சிறுமி யாழினி என்ற பெயரில் அழைக்கப்படுகிறார். தமிழகத்தை சார்ந்த பெற்றோர் அல்லது உறவினர்கள் யாரேனும் புகைப்படத்தில் உள்ள குழந்தையை தவறவிட்டுருந்தால் உரிய ஆவணங்களுடன் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, எண். 317 K.T.S மணி தெரு, மாமல்லன் நகர்,(மாமல்லன் மெட்ரிக் பள்ளி அருகில்), காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு 30 நாட்களுக்குள் வந்து தகவல் தெரிவிக்கலாம். மேலும் விவரங்களுக்கு 044-27234950 / 7708102194 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் கேட்டுகொண்டுள்ளார்.

// ஒப்பம்//-
மாவட்ட ஆட்சியர் / தலைவர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
காஞ்சிபுரம்.

J. David Raj 11/10/2017
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.